<u>2026 ஜூலை மாதம் 08– ஆம் தேதி புதன்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 124/2024</u>

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 08– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.டீ.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW13 (LW20) – ராமலட்சுமி |
| தகப்பனார் பெயர்: | சீனிராஜ் |
| ஊர்: | போடிநாயக்கனூர் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | காவல் ஆய்வாளர், போடிநகர் காவல்நிலையம் |
| வயது : | 52 |

08.07.2026

(1, 2 எதிரிகள் ஆஜர். 3வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசார் திரு.ரவிக்குமார், தலைமை காவலர், எண்.267 அவர்களால் அடையாளம் காணப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

1. நான் தற்சமயம் போடிநகர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 16.10.2023ம் தேதி போடிவட்ட ஆய்வாளராக பணியாற்றியபோது அன்றைய தினம் சார்பு ஆய்வாளர் திரு.அசோக் அவர்களால் பதிவு செய்யப்பட்டு, என்னுடைய மேல்விசாரணைக்கு வைக்கப்பட்ட போடிநகர் காவல்நிலைய குற்ற எண்.493/2023 பிரிவுகள் 294பி, 307 இ.த.ச கீழான வழக்கினை அன்றைய தினமே என்னுடைய மேல்விசாரணைக்கு

எடுத்துக்கொண்டு 16.00 மணிக்கு சம்பவ இடம் சென்று, சாட்சிகள் ராஜாங்கம், மணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.

2. பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அதன்மேல் 16.45 மணிக்கு சம்பவ இடத்தில் டைல்ஸ் கல்லில் படிந்திருந்த ரத்தக்கறையுடன் கூடிய டைல்ஸ் சிறிதளவையும், ரத்தக்கறை படியாத டைல்ஸ் சிறிதளவையும் பார்வை மகஜர் சாட்சிகள் முன்னிலையில், அத்தாட்சியில் கைப்பற்றினேன். அதன்மேல் சாட்சிகள் முருகேசன், ராஜேஷ்குமார், ராமவேல், யோகமலர், இளங்கோ, முருகன், ராஜாங்கம், மணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்மேல் 11.11.2023ம் தேதி வாதியை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வாதி சம்பவத்தின்போது அணிந்திருந்த ரத்தக்கறை படிந்த சட்டையை அவர் வீட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்ததை படிவம் 91 மூலம் கைப்பற்றினேன்.

3. அதன்மேல் 26.11.2023ம் தேதியன்று காலை 05.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரி தமிழன் (எ) இளந்தமிழன் என்பவரை போடிநாயக்கனூர், புதுகாலனி, சந்தன மாரியம்மன் கோவில் அருகில் வைத்து காரணம் கூறி கைது செய்தேன். அதன்மேல் 05.15 மணிக்கு சாட்சிகள் மதன்குமார், சின்னச்சாமி ஆகியோர் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். எதிரிக்கு படித்துக் காண்பித்து எதிரி மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன்.

4. எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னபடி எதிரி மற்றும் சாட்சிகளை காலை 8.00 மணிக்கு விருதுநகர் மாவட்டம், பேரையூர், கொண்டையன்பட்டி அருகில் உள்ள மீனாட்சிபுரம் அன்புகண்ணன் என்பவரின் தோட்டத்து வீட்டிற்கு அழைத்துச் சென்று, அங்கு வீட்டு அருகில் நிறுத்தியிருந்த மோட்டார் சைக்கிளை அடையாளம் காட்டி, மோட்டார் சைக்கிள் டேங்க் கவரில் இருந்து

எதிரி எடுத்து ஆஜர் செய்த அரிவாளை சாட்சிகள் மதன்குமார், சின்னச்சாமி ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன்.

4. மேலும் எதிரி அடையாளம் காட்டிய TN 59 AS 6203 என்ற பதிவெண்கொண்ட Honda Shine வண்டியை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அதன்மேல் சாட்சிகள் மதன்குமார், சின்னச்சாமி, அன்புகண்ணன், ஆறுமுகம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்மேல் சொத்து மற்றும் எதிரியுடன் காவல்நிலையம் வந்து, எதிரியை திரேத பரிசோதனை செய்து, பாராவிடம் ஒப்படைத்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அதன்மேல் 29.11.2023 ம் தேதி வாதிக்கு சிகிச்சை அளித்த க.விலக்கு அரசு மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர் திரு.ராஜ்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. அதன்மேல் வழக்கு வாதிக்கு முதல்சிகிச்சை அளித்த மருத்துவர் சுஷ்மிதாஸ்ரீ, உதவி மருத்துவர், போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனை அவர்களை விசாரித்து சான்று பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்மேல் 24.01.2024 ம் தேதி வழக்கில் கைப்பற்றப்பட்ட தடய பொருட்களை கனம் நீதிமன்றம் உத்தரவு பெற்று, மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஒப்படைத்த காவலர் திரு.பாண்டி எண்.238 என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்மேல் சம்பவ இடத்திலிருந்த கண்காணிப்பு கேமராவில் பதிவாகியிருந்த சம்பவத்தை பென்டிரைவில் பதிவு செய்து கொடுத்ததை காவல்நிலைய கணினியில் பதிவேற்றம் செய்து, அதற்கு 65 பி இந்திய சாட்சிய சட்டத்தின்படி சான்று வழங்கிய முதல்நிலை காவலர் எண்.533 ரதீன்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

6. தடய பொருட்களை பகுப்பாய்விற்கு அனுப்ப தபால் தயார் செய்து கொடுத்த கனம் போடிநாயக்கனூர் குற்றவியர் நீதித்துறை நடுவர் நீதிமன்ற

தலைமை எழுத்தர் செல்வி.தனலட்சுமி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்மேல் இவ்வழக்கில் தடய பொருட்களை ஆய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கிய மதுரை, வட்டார தடய அறிவியல் ஆய்வகர் திரு.சிவசங்கர் அவர்களை விசாரித்து சான்று பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்மேல் 24.01.2024ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவு 294பி, 307 இ.த.ச. என்பதுடன் சட்டப்பிரிவு 34 இ.த.ச. சேர்த்து பிரிவு சேர்த்தல் அறிக்கை தயார் செய்தேன்.

7. மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. படிவம் 91 முறையே **அ.சா.ஆ.13** முதல் **அ.சா.அ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பகுப்பாய்வு வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கண்காணிப்பு கேமரா பதிவிற்கான Proforma **அ.சா.ஆ.17**, சட்டப்பிரிவு சேர்த்தல் அறிக்கை **அ.சா.ஆ.18**, உயிரியல் அறிக்கை **அ.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகைப்படம் மற்றும் பென்டிரைவ் **அ.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

8. அ.சா.ஆ.1 புகாரில் ஏற்கனவே வாதியின் மனைவிக்கும் வாதிக்கும் ஏற்பட்ட பிரச்சனையில் 1வது எதிரி தடுத்தார் என்றும், அதனால் முன்விரோதம் இருந்தது என்றும், குடும்ப பிரச்சனையில் தலையிட வேண்டாம் என்று தள்ளிவிட்டதில் 1வது எதிரிக்கு காயம் ஏற்பட்டது என்றும், அதனால் முன்விரோதம் இருந்ததாக வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 16.10.2023ம் தேதியில் போடி–தேவாரம் சாலையில் உள்ள அண்ணாமலை பர்னிச்சர் கடையில் புகார்தாரர் இருந்தாரா என்றால் இருந்தார். மேற்படி பர்னிச்சர் கடையில் உள்ள பீரோ, கூர்மையான இரும்பு சாமான்கள் மற்றும் மரச்சாமான்களின் மூலம் வாதிக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

9. ஏற்கனவே இருந்த முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு, 1வது எதிரியின் பெயரிலும், அடையாளம் தெரிந்த, விலாசம் தெரியாத இரண்டு நபர்கள் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். விசாரணையின்போது மற்ற இரண்டு எதிரிகளின் பெயர்களை வாதி கூறினார். வழக்கு சான்று பொருளான சா.பொ.1 அரிவாளால் வெட்டியிருந்தால் ரத்தக்கறை அல்லது ரத்த வாசனை இருக்கும் என்றால் என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 –ல் இரத்தக்கறை உள்ளது. சா.பொ.1–ல் உள்ள ரத்தக்கறை 1வது ஏற்படுத்திய காயத்தினால் உள்ள இரத்தக்கறை இல்லை என்றாலும், வாதிக்கு ஏற்கனவே இருந்த காயத்தில் இரத்தத்தை சா.பொ.1ல் சேர்த்து எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. வாதிக்கு ஏற்பட்ட காயம் ஆஜர் எதிரிகளால் காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரி மீது தாக்கல் செய்த வழக்குகள் முடிந்துவிட்டது என்றால் சரியல்ல, நிலுவையில் உள்ளது. நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளும் முடிந்துவிட்டது என்றாலும், இந்நீதிமன்றத்தில் S.C.No.111/2025 மட்டும் நிலுவையில் உள்ளது என்றால் விபரத்தை பார்த்தால் தான் தெரியும். ஆஜர் எதிரி மீது பல்வேறு வழக்குகள் இருந்ததால் புகார்தாரருக்கும் எதிரிக்கும் ஏற்கனவே இருந்த முன்விரோதத்தை பயன்படுத்திக்கொண்டு எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. எதிரியை சம்பவ இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும், விசாரணைக்காக காவல்நிலையம் அழைத்து கைது செய்ததாக ஆவணங்கள் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் 1வது எதிரி தானாக காவல்நிலையம் சென்று விசாரணைக்கு ஒத்துழைத்தவரை பொய் வழக்கு தாக்கல் செய்து சம்பவ இடத்தில் கைது செய்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் 2வது எதிரி பயன்படுத்திய இருசக்கர வாகனத்தை சாட்சி அன்புகண்ணனின் தோட்டத்தில் இருந்ததை அவரது முன்னிலையில்

கைப்பற்றியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அன்புகண்ணனை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

12. சா.பொ.1 அரிவாளை இருசக்கர வாகனத்தின் டேங்கில் இருந்த உறையில் இருந்து கைப்பற்றியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, வண்டிக்கேற்றாற்போல் டேங்க் உறையை தைத்து போட்டுக்கொள்ளலாம். 2வது எதிரி அவ்வாறு உறை தைத்து போடவில்லை என்றாலும், அன்புகண்ணன் தோட்டத்திலிருந்து அரிவாள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. அண்ணாமலை பர்னிச்சர் கடையில் இருந்து கைப்பற்றப்பட்ட கண்காணிப்பு கேமரா பதிவுகளை நேரடியாக பார்த்து நான் எடுத்தேனா என்றால் நான் பார்த்து பென்டிரைவில் பதிவிறக்கம் செய்து, காவல்நிலையத்தில் உள்ள காவலரிடம் கொடுத்தேன், அவர் கணினியில் பதிவேற்றம் செய்து, 65 பி இந்திய சாட்சிய சட்டத்தின்கீழ் சான்று வழங்கினார்.

13. முறையாக கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்யாமல் காவலர்களை வைத்து பதிவிறக்கம் செய்து, தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1வது எதிரியிடம் இருந்து பெறப்பட்டதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் 2, 3 எதிரிகளை சம்பவத்தில் ஈடுப்பட்டதாக கூறியுள்ளார் என்றும், அவர் அவ்வாறு கூறவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து நான் தயார் செய்த ஒப்புதல் வாக்குமூலம் என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் புகாரை பெறாமல் கைரேகை மட்டும் பெற்றுக்கொண்டு, தயார் செய்யப்பட்ட பொய் புகார் என்றால் சரியல்ல. நம்ப வேண்டும் என்பதற்காக புகாரை அவரது மனைவி யோகமலரிடம் கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

14. காயச்சான்றிதழில் அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் மட்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காயம்பட்டவர் மருத்துவமனையில் இரண்டு நபர்கள் என்று கூறியுள்ளபோது, மூன்று எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் குறுக்கு

விசாரணையில் ஆஜர் 1வது எதிரியை தெரியும், 2, 3 எதிரிகளை தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்யவில்லை என்றாலும், ஏற்கனவே சார்பு ஆய்வாளர் தயார் செய்து வைத்திருந்ததை நான் தயார் செய்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 08.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.08 18:19:13 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
08.07.2026